21.03.2025 S.C.No.138 of 2017 P.W.14 – Ravi

(A3 and A6 absent and their absence condoned u/s 317 of Cr.P.C. petitions filed and allowed. A1, A2, A4, A5 present)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் மதியம் 03.10 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கே: வழக்கினுடைய எதிரிகள் உயர் அதிகாரிகளின் ஆணைப்படி பல்வேறு பணிகளில் 16.06.2015 முதல் 19.06.2015 வரை டிஎஸ்பி கணேசன் அவர்களின் மேற்பார்வையில் பணியில் இருந்ததால் ஷமீல் பாஷாவை எந்த நேரத்திலும் எந்த தேதயிலும் எந்த இடத்திலும் விசாரிக்கவில்லை என்றால்?

ப: அப்படி சொன்னால் சரியல்ல.

கே: 1ம் எதிரிக்கு காவலர் குடியிருப்பு ஒதுக்கீடு செய்ததாக உங்களது நிலையத்தில் ஆவணம் உள்ளதா ?

ப: தெரியாது. அவருக்கு ஒதுக்கப்பட்டதா என்று தெரியாது.

கே: குடியிருப்பு ஒதுக்கீடு செய்ததற்கான ரிஜிஸ்டர் ஆவணம் உள்ளதா?

ப: யார்யாருக்கு குடியிருப்பு ஒதுக்கப்பட்டது என்பதற்கான ரிஜிஸ்டர் உள்ளது.

கே: அதை சிபிசிஐடியிடம் கொடுத்தீர்களா?

ப: அனைத்து ஆவணங்களையும் சிபிசிஐடி பறிமுதல் செய்துக்கொண்டு போய்விட்டார்கள்.

கே: கோவிந்தசாமி காவல் ஆய்வாளர் உங்கள் நிலையத்தினுடைய பொறுப்பு ஏற்ற பிறகு 17 ஆவணங்களை (பட்டியல் ஆவண எண்.9) நிலையத்திலிருந்து எடுத்து நீதித்துறை நடுவர் எண்.1 பொறுப்பு நீதித்துறை நடுவர் எண்.5–க்கு கொடுத்திருக்கிறார். அதில் குடியிருப்பு ஒதுக்கீடு செய்ததற்கான ரிஜிஷ்டர் ஏதேனும் கொடுத்திருக்கிறாரா

என்று பார்த்து சொல்லவும்?

ப: இந்த பட்டியல் ஆவண எண் 9ல் குறிப்பிட்ட குடியிருப்பு ஒதுக்கீடு செய்ததற்கான ரிஜிஸ்டர் இதில் குறிப்பிடவில்லை.

கே: 1ம் எதிரிக்கு எந்த சூழ்நிலையிலும் காவலருக்கான குடியிருப்பு ஒதுக்கப்படவில்லை என்றால்?

ப: அது பற்றி எனக்கு தெரியாது.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலைய காவலர் குடியிருப்புகள் அனைத்தும் சிதைந்த நிலையில் இருந்தமையால் 1ம் எதிரிக்கு குடியிருப்பு ஏதும் ஒதுக்கப்படவில்லை என்றால்?

ப: அதைப்பற்றி எனக்கு தெரியாது.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தை பொறுத்தவரை உதவி ஆய்வாளர் காவலர்களுக்கு மட்டும்தான் வீடுகள் இருந்தன. அதுவும் சிதைந்த நிலையில் இருந்ததால் அந்த குடியிருப்புகளை எவரும் உபயோகப்படுத்தவில்லை என்றால்?

ப: பழுதடைந்திருந்தது. காவலர் குடியிருப்பில் ஓரிரண்டு குடியிருப்புகளை பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள்.

கே: யார் யார் அந்த ஓரிரண்டு குடியிருப்புகளில் இருந்தார்கள்?

ப: குறிப்பிட்டு யாருமில்லை. அவ்வப்பொழுது யாராவது காவலர்கள் தங்கிக்கொள்வார்கள்.

கே: அ.த.சா.ஆ.41ல் ஏதாவது வரைபடம் உள்ளதா?

ப: எவ்வித வரைபடமும் அதில் இல்லை.

கே: அ.த.சா.ஆ.41ல் 5வது வரிசையில் வழக்கு சொத்து யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்ற தலைப்பின் கீழ் "கதவு எண் 2/120 SI குடியிருப்பு, பள்ளிக்கொண்டா என்ற விலாசத்தில்" என்று உள்ளது என்றால்?

ப: இருக்கிறது. சரிதான்.

கே: மேற்கண்ட கதவு எண் 2/120 SI quarters எந்த SI–கு ஒதுக்கீடு

செய்யப்பட்டது என்பது குறித்து ஆவணம் இந்த நீதிமன்றத்தில் இருக்கிறதா ?

ப: நீதிமன்றத்தில் இல்லை.

கே: அ.த.சா.ஆ.41 மற்றும் அ.த.சா.ஆ.26 இரண்டையும் பார்த்து மேற்கண்ட 2/120 என்ற SI Quarter நிலையத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்று சொல்லுங்கள்?

ப: அவ்வாறு ஏதும் அ.த.சா.ஆ.41 மற்றும் அ.த.சா.ஆ.26 ல் குறிப்பிடப்படவில்லை.

கே: 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ் மேற்கண்ட SI quarters 2/120–ல் இருந்ததற்கான ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ் எந்த சூழலிலும் மேற்கண்ட quarters ல் (2/120)ல் ஷமீல் பாஷாவை வைத்து விசாரித்தது தங்களுக்கு நேரடியாக தெரியுமா?

ப: தெரியாது.

கே: தாங்களின் முதல் விசாரணையில் காவல் ஆய்வாளர் குடியிருப்பு நாட்டு ஓடு போட்டது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதற்கான புகைப்படமோ அல்லது வேறு ஆவணங்களோ தாங்களால் இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா?

ப: இல்லை.

கே: வழக்கின் எதிரிகள் மேற்கண்ட Quarters–ல் இருந்ததாக தங்களுக்கு நேரடியாக தெரியுமா?

ப: இந்த சம்பவமாக நான் பார்க்கவில்லை. ஆய்வாளர் சொல்லி தெரியும்.

கே: ஆய்வாளர் 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ் தங்களிடம் சொன்னதற்கான ஏதேனும் ஆவணம் இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்களா?

ப: ஆய்வாளர் என்னிடம் எதுவும் சொல்லவில்லை.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலைய குடியிருப்பு ஒதுக்கீடு தொடர்பாக 1ம்

எதிரி தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி பெற்ற பதில்களின் அடிப்படையில் 10.02.2014 முதல் 22.06.2015 வரையிலான காலக்கட்டத்தில் 1ம் எதிரிக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலைய காவலர் குடியிருப்பு ஒதுக்கப்படவில்லை என்பது ந.க.எண் 06/கா.து.க/ஆ/2021, நாள் 20.02.2021 கடிதத்தில் இருக்கிறது என்றால்?

ப: சரிதான். அது எ.ம.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கே: 1ம் எதிரிக்கு எவ்வித குடியிருப்பும் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் ஒதுக்கப்படாததால் அவரோ அல்லது மற்ற வழக்கு எதிரிகளோ அந்த குடியிருப்பில் எந்த சூழலிலும் இருக்கவில்லை. தாங்கள் சிபிசிஐடி சொல்லிக்கொடுத்து இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல. ஆனால் குடியிருப்பில் ஆய்வாளர் மட்டும் தங்கியிருந்தார்.

கே: 1ம் எதிரி ஆய்வாளர் காட்பாடியில் உள்ள சன்பீம் பள்ளிக்கு நேர் எதிரில் உள்ள வாடகை வீட்டில் குடும்பத்துடன் தங்கி பிள்ளைகளையும் சன்பீம் பள்ளியில் படிக்க வைத்துக்கொண்டிருந்தார் என்று தங்களுக்கு தெரிந்திருந்தும் சிபிசிஐடி சொல்லிக்கொடுத்தது போல் ஆய்வாளர் குடியிருந்தார் ஆய்வாளர் குடியிருந்தார் என்று திரும்பத்திரும்ப பொய் சொல்கிறீர்கள் என்றால்?

ப: ஆய்வாளர் பள்ளிக்கொண்டா காவல் அதிகாரிகள் குடியிருப்பில் இருந்தார். நான் பார்த்திருக்கிறேன்.

கே: அவர் குடியிருந்தார் நான் பார்த்தேன் என்பதை பொது நாட்குறிப்பில் குறித்தீர்களா?

ப: பதிவிடவில்லை.

கே: அ.த.சா.ஆ.63ல் உள்ள மூன்று கையெழுத்தை எதற்காக வாங்கினீர்கள்?

ப: பவித்ரா Woman missing வழக்கு தொடர்பாக புகார்தாரர் பழனி மூன்று பேரை சந்தேகத்திற்குரியவர்கள் என்று சொன்னதால் அந்த மூன்று பேரை அழைத்து நானும் ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்களை Bindover செய்தற்கான ஆவணம்தான் அ.த.சா.ஆ.63.

கே: அ.த.சா.ஆ.63 ல் வாங்கப்பட்ட மூன்று கையெழுத்துகளில் ஏதேனும் தேதியிடப்பட்டிருக்கிறதா என்றால் ?

ப: தேதியிடப்படவில்லை.

கே: அந்த அ.த.சா.ஆ.63 ல் கையொப்பமிட்டுள்ள மூவரின் முகவரி உள்ளதா என்றால்?

ப: புகழேந்தி, சரவணன், செந்தில், பொன்னகரம், மாதனூர் என்று உள்ளது.

கே: கதவு இலக்கம், தெரு பெயர் ஏதேனும் அதில் உள்ளதா?

ப: கேட்டேன். கதவு இலக்கம், தெரு ஆகியவை இல்லை என்று சொன்னார்கள்.

கே: உங்களுக்கு சரவணன் பற்றியும் புகழேந்தியை பற்றியும், அவர்கள் செய்யும் சட்ட விரோத தொழில் தெரிந்திருந்ததால் அவர்களது சரியான முகவரியை தாங்கள் இந்த நீதிமன்றத்தில் கொடுக்க மறுத்து பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் ?

ப: இந்த வழக்கு தொடர்பாக வாதி கொடுத்த தகவலின் பேரில் சந்தேகத்தின் அடிப்படையில் அவர்களை அழைத்து விசாரித்தேன். மற்றபடி அவர்களின் பூர்வீகம் பற்றி எனக்கு தெரியாது.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 வரை ஷமீல் பாஷா நிலையத்தில்தான் இருந்தார். குறிப்பாக உங்களுடைய பாதுகாப்பில்தான் அவர் இருந்தார். அதை மறைத்து 19.06.2015 1ம் எதிரி ஆய்வாளர் ஷமீல் பாஷாவை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார் என்று சிபிசிஐடி சொல்லிக்கொடுத்து நீங்கள் பொய் சாட்சி சொல்கிறீர்கள்

என்றால் ?

ப: சரியல்ல. 17.06.2015 அன்று ஷமீல் பாஷாவை ஆய்வாளர் அழைத்துச்சென்றார். 19.06.2015 அன்று அழைத்து வந்தார். அது மட்டும்தான் தெரியும்.

கே: 17.06.2015 அழைத்துச்சென்றதாவும் 19.06.2015 அழைத்து வந்ததாகவும் பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால்?

ப: பதிவு செய்ய வேண்டாம் என் ஆய்வாளர் சொன்னதால் பதிவு செய்யவில்லை.

கே: பதிவு செய்ய வேண்டாம் என்று ஆய்வாளர் சொன்னதையாவது தாங்கள் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்தீர்களா?

ப: இல்லை. ஆய்வாளர் செய்ய வேண்டாம் என்று சொல்லக்கூடிய செயலை பொதுநாட்குறிப்பேட்டில் பதிய இயலாது.

கே: ஆய்வாளர் பதிவு செய்ய வேண்டாம் என்று சொன்னதை உங்களது போலீஸ் நோட் புக்–ல் பதிவு செய்து உரிய உயர் அதிகாரிகளிடம் கையொப்பம் வாங்கியிருக்கிறீர்களா?

ப: ஆய்வாளர் உத்தரவை மீறி நான் நோட்புக்கில் பதிவு செய்தால் உயர் அதிகாரிகளின் தேவையற்ற பேச்சுக்கு அடிப்பட ஆளாவேன்.

கே: மேற்சொன்ன பதிலின் அடிப்படையில் தாங்கள் அரசு ஊழியர் என்ற நிலையில் வழுவி பிறரை வலையில் சிக்க வைக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு அரசு சம்பளம் வாங்கிக்கொண்டு தவறு செய்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 வரை ஷமீல் பாஷாவை நிலைய பொறுப்பில் வைத்திருந்த தாங்கள் செய்த தவறுகளை மறைப்பதற்காக மேற்கண்ட தேதிகளில் வேறு பணியில் பணியாற்றிக்கொண்டிருந்த ஆய்வாளர் சொன்னதாக இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி

சொல்கிறீர்கள் என்றால்?

ப: 17.06.2015 அன்று ஆய்வாளர் ஓட்டுநர் மணிகண்டனிடம் ஆய்வாளர் சொன்னதின் பேரில் வாகனத்தில் ஏற்றிச்சென்றுவிட்டார்கள். இவரைரும் காவல் நிலையத்திலிருந்து மணிகண்டன் ஷமீல் பாஷாவை அழைத்து வந்து வாகனத்தில் ஏற்றிவரும்படி சொன்னதாக அழைத்துச்சென்றார்கள். மீண்டும் 19.06.2015 அன்று அழைத்து வந்தார்கள்.

கே: மேற்சொன்ன தகவல் 16.06.2015 முதல் 19.06.2015 முடிய பதிவு செய்யப்பட்டுள்ள பொதுநாட்குறிப்பு பதிவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதா?

ப: ஆய்வாளர் உத்தரவிடவில்லை. அதனால் பதிவு செய்யவில்லை.

கே: தாங்கள் கைப்பட எழுதிய அ.த.சா.ஆ.20 (பட்டியல் ஆவண எண்.10) தாங்கள் மேலே சொன்ன பதில்கள் 17.06.2015 கூட்டிச்சென்றதாகவும், 19.06.2015 கூட்டி வந்ததாகவும் பதிவுகள் ஏதும் உள்ளதா ?

ப: அவ்வாறு உள்ளது. அதை எழுதி நான் ஆய்வாளரிடம் காட்டினேன். அவர் அதை பார்த்து சரி என்று சொன்னதும் அதில் உள்ள நபர்களிடம் கையொப்பம் வாங்கினேன்.

கே: தங்களது முதல் வாக்குமூலத்தில் மேலே சொன்னவாறு அ.த.சா.ஆ.20 ஐ "எழுதி ஆய்வாளரிடம் காட்டினேன் அதை அவர் பார்த்து சரி என்று சொன்னதும்" என்று சொற்றொடர் உள்ளதா?

ப: காட்டினேன் என்று நான் சொல்லவில்லை. Bindover செய்தேன் என்பதை சொல்லியுள்ளேன்.

கே: அ.த.சா.ஆ.20–ஐ எழுதி ஆய்வாளரின் காட்டினேன் என்பதை சிபிசிஐடியிடம் கூறினீர்களா என்றால் ?

ப: சொன்னேன். காட்டினேன் என்று நான் சொல்லவில்லை. Bindover செய்தேன் என்பதை சொல்லியுள்ளேன்.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 வரை தங்களின் காவல் நிலைய

பொறுப்பில் இருந்த ஷமீல் பாஷாவை பொறுப்பேற்க வேண்டிய சூழல் அமைந்துள்ளதால் அந்த குற்றத்திலிருந்த தப்பித்துக்கொள்ள வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் ஆய்வாளரிடம் காட்டினேன் சொன்னேன் என்று பல்வேறு பொய்களை இந்த நீதிமன்றத்தில் கூறியிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல. ஆய்வாளர் உத்தரவுப்படி அனைத்தும் பதிவிடப்பட்டது என்று ஆய்வாளரிடம் காட்டி உத்தரவு பெற்ற பின்னே பதிவு செய்தேன்.

கே: ஆய்வாளர் உத்தரவுப்படி அனைத்தும் பதிவிடப்பட்டது என்று பொதுநாட்குறிப்பில் பதிந்தீர்களா?

ப: ஆய்வாளர் உத்தரவிடவில்லை. பதிவிடவில்லை.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 வரை ஷமீல் பாஷாவை வைத்திருந்த நீங்கள் ஏதேனும் பதிவேடுகளில் PSR லோ அல்லது வேறு ஆவணங்களிலோ அவரது உடல்நலம் குறித்து அல்லது உடல் தகுதி குறித்து பதிவிட்டு எழுதியிருக்கிறீர்களா?

ப: அதை நான் ஆய்வாளரிடம் கேட்டேன். பதிவிட வேண்டாம் என்றார். அதனால் பதிவிடவில்லை.

கே: ஆய்வாளரிடம் கேட்டேன் பதிவிட வேண்டாம் என்ற செய்தியையாவது பொதுநாட்குறிப்பிலோ அல்லது உங்களது நோட்புக்கிலோ பதிவிட்டீர்களா?

ப: அப்படி பதிவு செய்தால் உயர் அதிகாரிகளின் கடுஞ்சொல்லுக்கு ஆளாவேன். அதனால் பதிவிடவில்லை.

கே: அ.த.சா.ஆ.33 ல் 16.06.2015 முதல் 19.06.2015 வரை ஷமீல் பாஷாவின் நிலைய இருப்பு குறித்தோ அல்லது ஷமீல் பாஷா குறித்து வேறு ஏதேனும் தகவல்களோ பதிவிடப்பட்டுள்ளனவா?

ப: ஷமீல் பாஷா குறித்து எதுவும் பதிவிடப்படவில்லை. ஆய்வாளர் உத்தரவிடவில்லை.

கே: ஆய்வாளர் பதிவு செய்ய வேண்டாம் என்று உத்தரவிட்டதாக உங்களது உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்தீர்களா?

ப: காவல் துறையின் ஒரு உயர் அதிகாரியை பற்றி வேறு உயர் அதிகாரிகளுக்கு சொன்னால் அவரின் கடுஞ்சொல்லுக்கு ஆளாவேன். அதனால் சொல்லவில்லை.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 வரை ஷமீல் பாஷாவின் நிலைய இருப்பு குறித்து பதிவு செய்யப்படாமல் வேண்டுமென்றே ஆய்வாளரை குற்றப்படுத்தும் நோக்கில் செயல்பட்டிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல. 16.06.2015 மட்டும்தான் ஷமீல் பாஷா ஆய்வாளரின் உத்தரவின் பேரில் காவல் நிலையத்தில் இருந்தார். 17.06.2015 அன்று ஆய்வாளர் ஷமீல் பாஷாவை காவல் நிலையத்திலிருந்து அழைத்துச்சென்றுவிட்டார்.

கே: ஷமீல் பாஷாவிற்கு தங்களின் பொறுப்பில் இருந்தபோது நடந்ததை மறைத்து குற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால்?

ப: ஷமீல் பாஷா 16.06.2015 அன்று இருந்தபோது எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. 19.06.2015 அன்று அழைத்து வந்தபோது ஷமீல் பாஷாவின் கைகள் வீக்கமாக இருந்தது ஏன் என்று கேட்டதற்கு ஆய்வாளர் அடித்துவிட்டார் என்று கூறினார்.

கே: மேற்கண்ட பதிலில் உள்ள 19.06.2015 அன்று அழைத்து வந்தபோது ஷமீல் பாஷாவின் கைகள் வீக்கமாக இருந்தது, ஏன் என்று கேட்டதற்கு ஆய்வாளர் அடித்துவிட்டார் என்பதனை சிபிசிஐடியிம் சொன்னீர்களா?

ப: என்னிடம் உள்ள ஸ்டேட்மென்டில் அவ்வாறு உள்ளது. நீதிமன்றத்தில் போலீசார் தாக்கல் செய்த சாட்சியின் கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தில் அவ்வாறு உள்ளதா என்று வினவி அவரின்

வாக்குமூலத்தை காட்டியபோது சாட்சி அதை படித்து பார்த்து அதில் உள்ளது என்கிறார்.

கே: என்ன இருக்கிறது என்பதை படித்து சொல்லவும்?

ப: 19.06.2015 அன்று காலை 10.00 மணியளவில் ஆய்வாளர் ஷமீல் பாஷாவை போலீஸ் வாகனத்தில் கூட்டிக்கொண்டு ஸ்டேசன் வந்தார். நான் வெளியில் சென்று ஷமீல் பாஷாவை ஸ்டேசனுக்குள் அழைத்து வந்தேன். ஆய்வாளரும் பின்னாடியே வந்தார். ஸ்டேசனுக்கு வந்தார். பின்பு ஷமீல் பாஷாவின் மாமனார் மற்றும் மாமாவை வரச்சொல்லி அவருடைய ரூமில் வைத்து பேசிக்கொண்டிருந்தார். ரைட்டர் ஷமீலிடம் சாப்பிட்டியா என்று கேட்க அவர் சாப்பாடு வேண்டாம் என்று சொல்லிவிட்டார். பின்னர் அவருக்கு ஜூஸ் வாங்கிக்கொடுத்தார். அவன் கைகளை தூக்க முடியவில்லை. வலிக்கிறது என்றான். மதியம் சுமார் 01.00 மணியளவில் ஆய்வாளர் என்னிடம் ஷமீல் பாஷாவை எழுதி வாங்கிக்கொண்டு அனுப்புங்கள் என்று சொல்லவே நான் ஆஜர் முச்சிலிக்கா எழுதி ஷமீலிடம் கையெழுத்து போடச்சொன்னபோது அவன் தன்னால் கையை தூக்க முடியவில்லை என்று சொன்னான். பின்னர் அவனிடம் இடது கை பெருவிரல் ரேகை பெறப்பட்டது. அப்போது அவன் கைகளை பார்த்தபோது கைகளின் மேல் பக்கம் வீக்கமாக இருந்தது. அவனிடம் கேட்டதற்கு ஆய்வாளர் தன்னை கோர்ட்டர்ஸ்ல் வைத்து கைகளை கயிறு கட்டி தூக்கி அடித்ததாக கூறினான். பின்னர் அவன் மாமனாரிடம் உடன் இருந்த முரளி என்பவரிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு அவனை அவர்களுடன் அனுப்பி வைத்தேன் என எனது கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தில் உள்ளது.

கே: தாங்கள் தற்போது படித்து காண்பித்த தகவல்களை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: ஆய்வாளர் சொல்லாமல் பொதுநாட்குறிப்பில் பதிவிட இயலாது.

கே: ஆய்வாளர் எந்த நிலையிலும் எதையும் பொதுநாட்குறிப்பில் எழுத வேண்டாம் என்ற சொல்லவில்லை என்றும் நான் தப்பித்துக்கொள்ள பொய் சாட்சி சொல்கிறேன் என்றால்?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு அதிகாரி ஆய்வாளரே ஆவார். அவரின் உத்தரவு இல்லாமல் எந்த பதிவும் பதிவிட இயலாது.

கே: தாங்கள் செய்த தவறுகளை மறைப்பதற்காக குற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்ள ஆய்வாளர் சொன்னால்தான் ஆவணங்களில் பதிவு செய்ய முடியும் என்று பொய்யான ஒரு சாட்சியத்தை இந்த நீதிமன்றத்தில் அளிக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: இந்த நீதிமன்றத்தில் ஏற்கனவே நீங்கள் அளித்த வாக்குமூலத்தில் சொல்லாததை சொன்னதாக இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால்?

ப: ஏற்கனவே நான் சொன்ன வாக்குமூலத்தில் மறந்துவிட்டதை தாங்கள் நினைவுபடுத்தியதால் நான் சொன்னேன்.

கே: 1ம் எதிரியை குற்றப்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு சிபிசிஐயிடம் ஒருவிதமாகவும் முதல் விசாரணையில் ஒரு விதமாகவும் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்து தாங்கள் செய்த குற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்ள பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால்?

ப: நான் ஏற்கனவே சிபிசிஐடியிடம் குறிப்பிட்டதிலும் நீதிமன்றத்தில் குறிப்பிட்டதிலும் ஆய்வாளர் குற்றம் செய்தார் என்று நான் சொல்லவில்லை. தாங்கள் கொடுக்கும் தகவல்களிலிருந்து ஆய்வாளர் குற்றம் செய்ததாக சாட்சியம் கொடுக்கிறேன்.

கே: 19.06.2015 அன்று மாலை 04.30 மணிக்கு மேல் பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு யாருடையது?

ப: 19.06.2015 அன்று காலை 09.00 மணிக்கு மேல் எஸ்எஸ்ஐ சிங்காரம் அவர்கள் ஜிடி பொறுப்பை பெற்றுக்கொண்டார். நான் ஓய்வுக்கு சென்றுவிட்டேன். மாலை 04.30 மணிக்கு எஸ்எஸ்ஐ சிங்காரம் பொதுநாட்குறிப்பேடு பணி பார்த்தார்.

கே: ஆம்பூர் மருத்துவமனையிலிருந்து ஏதாவது தகவல் அன்று மாலை 04.30 மணிக்கு வந்ததா என்று ஜிடியை பார்த்து சொல்லவும் ?

ப: அவ்வாறு எதுவும் பதிவிடப்படவில்லை.

கே: உங்களது முதல் விசாரணையில் பக்கம் 8 ல் "ஷமீல் பாஷாவிற்கு உடம்பு சரியில்லை என்றும் கை கால்களில் பிரச்சினை என்றும் அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக தகவல் சொன்னார்கள்" என்று குறிப்பிட்டிருக்கறிர்கள் யார் சொன்னது ?

ப: ஆம்பூர் காவலர் குடியிருப்பில் நான் குடியிருந்தேன். அப்போது அங்கிருந்த எங்களது காவலர் குடியிருப்பில் இருந்த குடும்ப உறுப்பினர்கள் ஆம்பூர் அரசு மருத்துவமனையில் ஷமீல் பாஷா சிகிச்சைக்கு சேர்ந்திருப்பதாக பேசிக்கொண்டார்கள்.

கே: உங்களுக்கும் இந்திய தௌகிக் ஜமாத் செயளால் ஜாகிருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு அதனால்தான் ஆம்பூர் அரசு மருத்துவமனையில் யார் சொன்னார்கள் என்பதை மறைத்து பொய் சொல்கிறீர்கள்?

ப: ஜாகீர் என்பவர் யார் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. நேரில் பார்த்தால்தான் அவரை தெரியுமா தெரியாதா என்று சொல்ல இயலும்.

கே: ஷமீல் பாஷா மருத்துவமனையில் இருப்பதாக கேள்விப்பட்ட தாங்கள் உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்தீர்களா?

ப: இன்ஸ்பெக்டர் மார்டின் பிரேம்ராஜிடம் அந்த தகவலை நான் சொன்னேன். அப்போது நான் ஜமனாமத்தூரில் வேறு ஒரு சிறப்பு வழக்கின் பணிக்காக நான் இருந்தபோது ஆய்வாளருக்கு நான் தகவல்

சொன்னேன்.

கே: மேற்கண்ட செய்தியை சிபிசிஐடியிடம் சொன்னீர்களா?

ப: இல்லை. ஷமீல் பாஷா மருத்துவமனையில் இருப்பதை கேள்விப்பட்டதை சிபிசிஐடியிடம் சொன்னேன்.

கே: 19.06.2015 அன்று நான் மீண்டும் பணிக்கு எப்போது வந்தேன் என்றால்?

ப: 20.06.2015 அன்று காலை 08.00 மணிக்கு பணிக்கு வந்தேன்.

கே: 20.06.2015 அன்று காலை 08.00 மணிக்கு அ.த.சா.ஆ.37 படி நீங்கள் பணிக்கு வரவில்லை பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் ?

ப: காலை 08.00 மணிக்கு காவல் நிலையம் வந்தேன். அதன் பிறகு மேல் அதிகாரியிடம் அனுமதி வாங்கி ஓய்வில் சென்றேன்.

கே: 20.06.2015 அன்று ஒருநாள் விடுப்பில் சென்றதாக ரப் டியூட்டி ரோஸ்டரில் பதிவிடப்பட்டுள்ளது. மீண்டும் எப்போது பணிக்கு வந்தீர்கள்?

ப: மறுநாள் காலை 21.06.2015 அன்று வழக்கம்போல் ரோல்காலுக்கு வந்துவிட்டேன்.

கே: 20.06.2015 விடுப்பில் சென்ற நீங்கள் அன்றைய தினம் மாலை 05.00 மணிக்கு ரோல்காலில் இருந்ததாக பதிவுகள் உள்ளது. அதனால் எதை வேண்டுமானாலும் தங்களின் விருப்பபடியும் எழுதிக்கொள்ளலாம் என்ற அளவிற்கு நிலைய ஆவணங்களை நிர்வகித்திருக்கிறீர்கள் என்றால்?

ப: தங்கள் மேலே குறிப்பிட்டபடி ஆவணங்களில் குறிப்பிடுவது நான் அல்ல. எழுத்தர் மற்றும் அன்று பணியில் இருந்தவர்கள் தான்.

கே: நீங்கள் தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக பொதுநாட்குறிப்பு, ரப் டியூட்டி ரோஸ்டர் மற்றும் அனைத்து ஆவணங்களிலும் தங்களுக்கு தேவையானதை மட்டும் பதிவு செய்துக்கொண்டு பிறரை சிக்க வைக்க வேண்டும் என்று பொய்யான தகவல்களை பதிவு செய்துவிட்டு இந்த

நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால்?

ப: நான் மேலே குறிப்பிட்டுள்ள அனைத்தும் தாங்கள் குறிப்பிடுவது போல் பொய்யாக எதையும் குறிப்பிடவில்லை.

கே: பட்டியல் ஆவண் எண் 6 ல் உள்ள கையெழுத்து யாருடையது என்றால்?

ப: எஸ்எஸ்ஐ கலைச்செல்வனுடையது.

கே: 19.06.2015 மாலை 04.30 மணிக்கு பிறகு ஆம்பூர் காவல் நிலையத்திலிருந்தோ அல்லது ஆம்பூர் மருத்துவமனையிலிருந்தோ ஏதேனும் தகவல்கள் வந்ததாக ஏதேனும் குறிப்பு பொதுநாட்குறிப்பில் உள்ளதா என்றால்?

ப: எதுவுமில்லை.

கே: அ.த.சா.ஆ.38 ல் 19.06.2015 மாலை 04.30 மணிக்கு பிறகு ஆம்பூர் மருத்துவமனையிலிருந்தோ தகவல் வந்ததாக பதிவுகள் உள்ளனவா என்றால்?

ப: இல்லை.

கே: வழக்கு எதிரிகள் யாரும் ஷமீல் பாஷாவை காவலர் குடியிருப்பில் வைத்து விசாரிக்கவில்லை தங்களுக்கு அது குறித்து நேரடியாகவும் தெரியாது ஆனால் குடியிருப்பு இல்லாததை குடியிருப்பு இருந்ததாகவும் ஆய்வாளருக்கு குடியிருப்பு கொடுத்ததாகவும் அதில் அவர் தங்கியிருந்ததாகவும் அந்த குடியிருப்பில் வைத்து ஷமீல் பாஷாவை விசாரித்ததாகவும் இந்த நீதிமன்றத்தில் தாங்கள் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல. ஆனால் ஆய்வாளர் குடியிருப்பில் தங்கியிருந்தார். அவரை நான் பல முறை சென்று பார்த்துள்ளேன். ஷமீல் பாஷாவை குடியிருப்பில் வைத்து விசாரித்தார்கள் என்று நான் நேரடியாக சொல்லவில்லை. பிரிகேடர் சிவானந்தம் சொல்லி எனக்கு தெரியும்.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 05.55 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.21 18:16:54 +0530